மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

அசல் வழக்கு எண்.201/2011

2026ம் ஆண்டு ஜனவரி 12ம் நாள் திங்கட்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மனோகரன் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

12.01.2026 பி.வா.சா.5 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு

குறுக்கு விசாரணை

18 மற்றும் 34 முதல் 37 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என வழக்கறிஞர் தெரிவிக்கிறார்.

**8ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கில் எனது தரப்பில் என்ன பரிகாரிம் கோருகிறேன் என்றால் நான் எனது பூமியை பாகம் கேட்கிறேன். தாவா சொத்தின் காலை எண் தெரிமா என்றால் தெரியும். காலை எண்.480 முதல் 489 வரை. மேற்படி காலைகளுக்கு உண்டான செக்குபந்தி எனக்கு தெரியுமா என்றால் அனைத்து செக்கு பந்திகளும் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது தாத்தா நாச்சிமுத்து என்பவருக்கு பாத்தியப்பட்டது.

2. எனது தாத்தாவிற்கு யார் யார் வாரிசுகள் என்றால் பொன்னுச்சாமி மற்றும் கோவிந்தசாமி ஆகியோர்கள் வாரிசுகள். தாவா சொத்து எனது

தாத்தாவிற்கு எந்த வகையில் பாத்தியப்பட்டது என்றால் 1971 கிரய ஆவணத்தின் அடிப்படையில் பாத்தியபட்டது. எனது தாத்தா யாரிடமிருந்து கிரயம் வாங்கினார் என்றால் அது எனக்கு தெரியாது. என் தாத்தா எவ்வளவு பூமியை கிரயம் வாங்கினார் என்றால் 4 ஏக்கர் 66 சென்ட் பூமியை கிரயம் பெற்றார்.

(ஆவணங்கள் பார்வையிட வேண்டுமென்ற வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் பி.வா.சா.8 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.01.12 18:34:31 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்